

திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதிக்குப்பட்ட சேரன்மகாதேவி மற்றும் பத்தமடை பேரூராட்சியில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தொடக்கி வைத்தார். இந்த நிகழ்வில், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஆவுடையப்பன், முன்னாள் திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ஞானதிரவியம், திருநெல்வேலி கிழக்கு மாவட்ட திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சார்பில் மேலப்பாளையம் பூலிபுதுத் தெருவில் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி “ஓரணியில் தமிழ்நாடு” உறுப்பினர் சேர்க்கை முகாம் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தலைமையில் நடைபெற்றது.இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர், கழக நாடாளுமன்ற குழு தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் பங்கேற்று வீடு வீடாக சென்று புதிய உறுப்பினர் சேர்க்கை முகாமை துவக்கி வைத்தார்.நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன்,முன்னாள் அமைச்சர் மைதீன்கான்,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் மாலை ராஜா, தொகுதி பார்வையாளர்கள் வசந்தம் ஜெயக்குமார்,முத்துச் செல்வி,மாநகர பொறுப்பாளர்கள் சு.சுப்பிரமணியன் ஏ.எல்.பி.தினேஷ்,பகுதி செயலாளர் கள் துபாய் சாகுல்,நமச்சிவாயம், மேயர் ராமகிருஷ்ணன்,துணை மேயர் ராஜ்,துணை செயலாளர் சுரேஷ், அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை,கருப்பசாமி கோட்டையப்பன்,காமினி தேவன் தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் காசிமணி, மண்டல தலைவர்கள் கதிஜா இக்லாம் பாசிலா,மகேஸ்வரி,உள்பட மாமன்ற உறுப்பினர்கள்,உள்ளாட்சி பிரதிநிதி கள்,கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



அருப்புக்கோட்டையில் “ஒரணியில் தமிழ்நாடு” பொதுக்கூட்டதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கலந்து கொண்டு பேசினார். முன்னாள் நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ரமேஷ் வரவேற்று பேசினார். கூட்டத்தில் முன்னாள் ஒன்றிய குழு தலைவர் சுபாராஜ், திமுக மாவட்ட பொருளாளர் பிரபாகரன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பாபுஜி, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அழகு ராமானுஜம், ஒன்றிய செயலாளர்கள் பாலகணேஷ், பொன்ராஜ், திமுக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டு, முடிவில் நகர செயலாளர் பந்தல்குடி சாகுல் ஹமீது, ஏ.கே.மணி நன்றி கூறினர்.



விருதுநகர் வடக்கு ஒன்றியம் ஒ.கோவில்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த அதிகமான பொது மக்களை “ஓரணியில் தமிழ்நாடு” மூலம் இல்லம் தோறும் சென்று தி.மு.க. உறுப்பினர் சேர்க்கும் பணியினை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். உடன் விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், நகர் மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.மாதவன், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு, பொதுக் குழு உறுப்பினர் ஆர்.பி.மதியழகன், சுதாகர் ஆகியோர் இருந்தனர்.



கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கு இணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆலோசனையின்படி முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஜீவா நகர் பகுதி ஜெய்ஹிந்த்புரத்தில் 2ஆயிரத்து ஐநூறு குடும்ப அட்டைதாரர்களுக்கு மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றினார். உடன் தொகுதி பொறுப்பாளர் டாக்டர் திலீப் ராஜ கண்ணப்பன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.தனசெல்வம், வடிவேல் முருகன், பகுதி செயலாளர் காவேரி, வட்டச் செயலாளர் பாலாஜி, பொதுக்குழு உறுப்பினர் முருகானந்தம், தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, கழக நிர்வாகிகள் பெ.சசிக்குமார், வீரராகவன், மதி வெங்கடேஷ், ஒத்தக்கடை சரவணன், ஐயப்பன், ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர் லக்ஷிகா ஸ்ரீ மற்றும் கழக நிர்வாகிகள், கழகத்தினர், திரளான பொதுமக்கள் பங்கேற்றனர்.



தி.மு.க. தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவிப்புக்கிணங்க மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ‘ஓர் அணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கும் பணியினை மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. மதுரை புதூர் பகுதியில் வீடு வீடாகச் சென்று மக்களிடம் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியினை நான்காண்டு சாதனைகளை எடுத்துரைத்து உறுப்பினர்களை சேர்த்தார். உடன் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர் கம்பம் செல்வேந்திரன் வட்ட கழகச் செயலாளர் புதூர் வேலு மற்றும் பகுதி கழக செயலாளர் வட்ட கழக செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அனைத்து மக்களும் ஓரணியில் இருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே ‘ஓரணியில் தமிழ்நாடு’

# மக்கள் விரோத ஆட்சி நடத்தி வரும் பா.ஜ.க.குறித்து மக்களிடம் எடுத்துக் கூறுவோம்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சிவகங்கை, ஜூலை. 5-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது.

தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஓரணியில் தமிழ்நாடு துவக்கப்பட்டுள்ளது. இது 100% சதவீதம் வெற்றிபெற வேண்டும் என்று முதல்வர் அவர்கள் விரும்புகிறார்கள். அத்தகைய முதல்வர்விருப்பத்தினை சிவகங்கை மாவட்டத்தில் முழுமையாக நிறைவேற்று வோம். தேர்தலை வைத்து மட்டும் இது செயல்படுத்தப்படவில்லை. தமிழகத்திற்கு பா.ஜ.கவினால் ஏற்படும் பாதிப்புகளை மக்களுக்கு எடுத்துக் கூறவே ஓரணியில் தமிழ்நாடு என்ற திட்டம் அறிமுகப்படுத்தி செயல்படுத்தப்பட உள்ளது .சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதியிலும் புதிதாக உறுப்பினர் சேர்க்கும் பணி நடைபெற்று வருகிறது.

இது 30% பேர் கூடுதலாக சேர்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். தற்போது உள்ள மக்கள் ஆதரவில் 30 இருந்து 40 வரை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது .அ.தி.மு.க பா.ஜ.க .கூட்டணியில் நிறைய முரண்பாடுகள் உள்ளது .

இந்த கூட்டணியை அ.தி.மு.க வினரே விரும்ப வில்லை. மதுரையில் நடைபெற்ற முருகன் மாநாட்டில் தேவையில்லாமல் பெரியார் அண்ணா பற்றி அவதுாறாக தெரிவிக்கப்பட்டுள்ளது .அண்ணா பெயரைச் சொல்லிக்கட்சி நடத்துபவர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளார்கள் . ஆனால் அது தங்களுக்கு தெரியாது என்று அவர்கள் கூறுவது விந்தையாக உள்ளது .வேடிக்கையாக உள்ளது .தமிழர்களின் உரிமை மானத்தை அ.தி.மு.க.பொதுச்செயலாளர் எடப்பாடியார் அடகு வைத்து விட்டார். தனது சுய லாபத்திற்காக தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக பா.ஜ.க. அ.தி.மு.க. கூட்டணி ஏற்படுத்தியுள்ளார். இது ஒருபோதும் தமிழகத்தில் எடுபடாது.

வருகிற தேர்தலில் மக்கள் அவர்களுக்கு பாடம் புகட்டு வார்கள். தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இன்று இந்தியாவில் செல்வாக்கு மிக்க தலைவராக வலம் வருவது பா.ஜ.க. அரசுக்கு பிடிக்கவில்லை. அவரது செல்வாக்கினை குறைக்கும் வகையில் இத்தகைய செயல்களில் ஈடுபட்டு உள்ளார்கள் .நேரடியாக பா.ஜ.கவினால் தமிழகத்தில் நுழைய முடியாமல் அ.தி.மு.க. கூட்டணி என்ற போர்வையில் நுழைய பார்க்கிறார்கள். அதை முற்றிலுமாக ஓரணியில் தமிழ்நாடு இயக்கத்தின் மூலம் தடுத்து நிறுத்தவே இத்தகைய ஏற்பாடுகளை தளபதி அவர்கள் செய்துள்ளார். அதற்கு சிவகங்கை மாவட்டம் முழு அளவில் ஆதரவு தரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் கூறினார்.

பேட்டியின் போது முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன், மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ.கணேசன் ஆகியோர் இருந்தார்கள்.



தேனி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெரியகுளம் கலைஞர் திடலில் “ஓரணியில் தமிழ்நாடு” நான்காண்டுசாதனைவிளக்க பொதுக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்ல பாண்டியன், நகரச் செயலாளர் முகமது இலியாஸ் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., சரவணகுமார் எம்.எல்.ஏ., பெரியகுளம் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், போடி தொகுதி பார்வையாளர் நேருபாண்டியன், ஆகியோர் சிறப்பு உரையாற்றினார்கள். நகர அவைத் தலைவர் வெங்கடாசலம், நன்றி உரையாற்றினார் . இதில் ஒன்றிய செயலாளர்கள் நகரச் செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.